8th April 1958]

எல்லாம் அதற்கு வேண்டிய ஷேர் காப்பிட்டல் தயாராக்கி, பிரிலிமினரி வொர்க்ஸ் இவைகள் எல்லாம் செய்ய காலதாமதமாகிறது. ஆனால் எல்லாப் பணமும் செலவு செய்யப்படும்.

SRI P. G. MANICKAM: வீடு கட்டும் திட்டத்தை கவனிப்பதற்காக சட்டரீதியில், அல்லது இராஜ்ய வீட்டு வசதி போர்டு என்று ஒன்று ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. இந்த போர்டானது ஜில்லாக்களில் எந்த முறையில் தன் அலுவல்களை நடத்துகிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இதுதான் ஸ்டாட்டுட்டரி ஹௌஸிங் போர்டு. மாகாண ரீதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் வீடுகள் கட்டவேண்டுமென்று விண்ணப்பங்கள் வருகிறதோ அதையெல்லாம் பரிசீலனை செய்து மாகாண போர்டு திட்டமிடும்.

*Constitution burning*

* 610 *Q*.—SRI A. V. P. ASAITHAMBI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total number of persons convicted in connexion with the agitation of "Constitution burning" and

(*b*) how many out of those convicted were given higher class in the Jail?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 2,718.

(*b*) 64

SRI A. V. P. ASAITHAMBI: திராவிடக் கழகத் தோழர்கள் ஜாதியை ஒழிப்பதற்காக சட்டத்தின் எந்தெந்த பிரிவுகள் தடையாக இருக்கிறதோ அவைகளை எழுதிக்கொண்டு அதை எரித்தார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? இதே மாதிரி சமீபத்தில் பாராளுமன்றத்தில் சில பகுதி சட்டப் புத்தகத்தில் இருக்கக்கூடாதென்று அதை கிழித்தெறிந்தார். அது குற்றமாக கருதப்படாததால் இவர்களையும், இவர்கள் எல்லோரையும் விடுதலை செய்ய சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இங்கு தண்டிக்கப்பட்டவர்கள், இந்த மன்றம் நிறைவேற்றிய ஒரு சட்டத்தின்கீழ் குற்றம் செய்யப்பட்டதாக நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, மற்ற பிரச்னைகள் எல்லாம் இதில் எழவில்லை.

*Prevention of Insults to National Honour Act*, 1957.

* 611 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state the amount of fines collected from the persons convicted under the Prevention of Insults to National Honour Act, 1957?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The amount of fines collected from persons convicted under the Prevention of Insults to National Honour Act, 1957 is Rs. 2,000.

SRI A. A. RASHEED: Sir, are there any persons who prefer to go to jail rather than pay the fine?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I have no information.